ஜூபிடர்ஸ்

ராஜகுமாரி

ஜூபிடர் ரிலீஸ்

ஒளிப்பதிவு	...	W. R. சுப்பாராவ் V. கிருஷ்ணன்
ஒலிப்பதிவு	...	A. கோவிந்தசாமி
லாபரட்டரி	...	C. A. சுந்தரராஜ்
எடிட்டிங்	...	D. துரைராஜ்
ஆர்ட் & செட்டிங்ஸ்	...	A. J. டோமினிக்
மேக் அப்	...	K. முருகேந்த குமார்
ப்ரொடக்ஷன்	...	V. வாசுதேவன் & C. சுந்தரம்

உதவியாளர்கள் :

ஒளிப்பதிவு	...	V. K. கோபால் G. P. வெங்கடேசன்
ஒலிப்பதிவு	...	P. T. பசுபதி P. கோவிந்த நாயர்
லாபரட்டரி	...	N. கோனேயன் M. சுப்ரமணியம்
எடிட்டிங்	...	M. A. திருமுகம்
மேக் அப்	...	S. R. சுடலை & K. ராமன்
பாட்டு	...	உடுமலை. நாராயணக் கவி
சங்கீத டைரக்ஷன் & மெட்டுகள்	...	S. M. சுப்பையா நாயுடு
இந்திய நடனம்	...	K. R. குமார், V. மாதவன் ஹரிகோவிந்த நாயர்
,, ,, (ஆங்கில)	...	மிஸஸ். ஸ்டீபானி ரெயின்பர்ட்
இந்திய சங்கீதம் (தமிழ்)		சென்ட்ரல் ஸ்டுடியோஸ் வாத்திய கோஷ்டி

கதை வசனம் & டைரக்ஷன்

A. S. A. சாமி, B.A., Hons

உதவி ஆசிரியர்
மு. கருணாநிதி

உதவி டைரக்ஷன்
T. K. ராமஸ்வாமி

நடிகர்கள் :

M. G. ராமச்சந்தர்	... சுகுமார்
T. S. பாலையா	... ஆலகாலன்
M. R. சாமிநாதன்	... மந்திரவாதி
S. V. சுப்பையா	... மல்லிகாவின் தந்தை
M. N. நம்பியார்	... பகு
புளிமூட்டை. T. R. ராமசாமி அய்யர்	... மந்திரவாதியின் சிஷ்யன்
M. E. மாதவன்	... நல்லான்
நாராயணப் பிள்ளை	... பாம்பாட்டி

மற்றும்:

T. M. கோபால், P. G. மாதவன், M. M. A. சின்னப்பா, C. P. கிட்டான், P. M. ஸ்வாமிநாதன், R. ராமசாமி அய்யர், A. C. இருசப்பா, S. T. லக்ஷ்மணன், S. மீனாக்ஷி சுப்ரமணியன், K. ஜகந்நாதன், K. ராஜரத்தினம், N. சங்கரமூர்த்தி, A. கணேஷ் ஸிங், T. R. ராஜகோபாலன், D. K. சின்னப்பா.

நடிகைகள் :

K. மாலதி	... மல்லிகா
K. தவமணி தேவி	... விஷா ராணி
M. S. பாக்யம்	... பகுனி
M. M. ராதாபாய்	... சுகுமாரன் தாயார்
C. K. சரஸ்வதி	... அஞ்சலை
R. மாலதி	... நடனப் பெண்

மற்றும்:

D. கமலாபாய், M. K. சுபத்ரா, R. பாரதி, K. லக்ஷ்மி, T. R. சந்திரா, P. P. மேரி, K. தங்கமணி, S. கோவிந்தம்மாள், T. P. லக்ஷ்மி, K. ரத்னம்.

ராஜகுமாரி

ஏற்கனவே அவன் மந்திரவாதி! நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என்ற ஆசை அவனை ஆட்டி வைக்கிறது. பிரதம சிஷ்ய ஞேடு ஏதோ ஒன்றைத் தேடிக் காடு மேடுகளில் பயங்கர சுற்றுப் பிரயாணம் செய்கிருன். அவன் அடங்கா ஆவலுக்கு பரிசாக ஜாலத் தீவில் அந்த மாய விளக்கு அகப்படுகிறது. மாய விளக்கின் மகிமையினுல் மாயா பூதம் வருகிறது; மாளிகை முளேக்கிறது; மங்கையர் குவிகின்றனர். கற்பனைக் கெட்டாத ஒரு அழகி வேண்டு மெனக் கனவு காண்கிருன். பூதத்திற்கு பசனை தெரியாதல்லவா? ஆகவே அவளைத் தேடி அவனே புறப்படுகிருன், சிஷ்யனுேடு.

இங்கே, இந்தியாவில் ஒரு நாட்டில்......ராஜகுமாரி மல்லிகா தன்னை மணக்கத் துடிக்கும் ஆலகாலனை அலட்சியப படுத்துகிருள். அரசன் ஒரு அப்பாவி. அவன் மூளையைத் தனக்கு அனுகூலப் படுத்திக்கொள்ளுகிருன் ஆலகாலன். வழக்கமாக வேட்டைக்குச செல்லும் மல்லிகாவுக்கு ஒரு நாள் மன மோகனமான வனவிருந்து கிடைக்கிறதி. அது தொடர்ந்து நாள்தோறும் நடைபெறுகிறது. விருந்து வழங்கியவன் ஒரு சாதாரண வாலிபன், சுகுமாரன்.

காதல் ஏற்றத் தாழ்வை இணைக்கும் ஏணிமரமல்லவா? இருவருக்குமிடையே அன்புமாளிகை எழுகிறது. அதன் பூரண வளர்ச்சியைத் தடுத்து நிற்கிருள் சுகுமாரின் தாய். "பெரிய இடத்து விஷயம்...ஆபத்து....! அணுகாதே" என்ற தாயின் உபதேசத்தைத்தட்டிக்கழிக்கும் தைரியம் அவனுக்கில்லை. மல்லிகா கைவிடப்படுகிருள்.

ராஜகுமாரியின் நினைவில் வாடிய ஆலகாலன் அவளை எப்படியும் தன் வசப்படுத்த ஒரு சக்தியை தேடுகிருன். அழகித் தேடி அலைந்த மந்திரவாதியைச் சந்தித்து விஷயத்தை வெளியிடுகிருன். கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று, மந்திரவாதிக்கு. ஆலகாலனையும் ஏமாற்றி மல்லிகாவை கவர்ந்து செல்கிருன்.

அவளை மீட்க ஆலகாலனின் கப்பற்படை புறப்படுகிறது ஜாலத்தீவை நோக்கி! மந்திரவாதியின் மாயா சக்தியின்முன் படை பஞ்சுதானே......பாழாகி விடுகிறது.

"மல்லிகாவை மீட்பவருக்கு அவளையே பரிசாகத் தரப்படும்" இது அரசாங்கத்தின் அறிக்கை. அது கண்ட சுகுமார் தாயின் ஆணை பெற்றுக் கிளம்புகிறான்.

ஜாலத்தீவுக்கு செல்லும் மார்க்கத்தில்......அலைகளினூடே ஆலகாலன் தத்தளிப்பதைக் கண்டு, அவனையும் படகில் ஏற்றிக் கொள்ள, அவன் காட்டியபயத்தில் கப்பலோட்டி, கப்பலின் திசையைத் திருப்புகிறான். சுகுமாருக்குஒரே கவலை.........

சர்ப்பத் தீவை அடைந்த சுகுமாருக்கு நல்ல துணை கிடைக்கிறது. பகு - பகுனி! இருவரும் பாம்பாட்டியின் மக்கள்தான்...... யாராயிருந்தால் என்ன? வாஞ்சை அவர்கள் மூவரையும் வசியப்படுத்தி விடுகிறது. அதே தீவில் ஆலகாலனும் எங்கேயோ சுற்றி அலைகிறான். சுகுமாரின் தேவை, "ஜாலத் தீவுக்குப் போக ஒரு கப்பல்" அவ்வளவுதான். "விஷா ராணி நடத்தும் போட்டியில் வெற்றி பெற்று விட்டால் கப்பல் கிடைக்கும்" என்பது பகுவின் யோசனை. விஷாராணியின் விஷ உள்ளத்தை அறியாத முடிவு இது!

போட்டியில் சுகுமாருக்குத்தான் வெற்றி. அந்த வெற்றியில் குறுக்கிடுகிறான் ஆலகாலன்.........அவனும் முறிய அடிக்கப்படுகிறான்.

அன்றிரவு! விஷா ராணி, தன்னைக் காமக் கப்பலில் ஏற்றிச் செல்லுமாறு சுகுமாரை வற்புறுத்துகிறாள். அவன் சம்மதிப்பானா? தன் இஷ்டத்துக்கு இணங்காத ஒரு தூசிகூட உலகத்தில் இருக்க முடியாது என பேய்க் கூச்சலிடுகிறாள், விஷா! பகுவும் பகுனியும் திடீரென அங்கு பாயாவிட்டால் சுகுமார் மாண்டிருக்க வேண்டும். ராணியின் ஆத்திரம் விஷம்போல் ஏறுகிறது! "மறுநாள் காலை..... உங்கள்......மானத்தை வாங்குகிறேன்" என்ற எச்சரிக்கையோடு மூவரையும் பாதாள சிறையில் தள்ளுகிறாள்.

"மறுநாள் காலை மானத்தை வாங்குகிறேன்" இந்த வார்த்தை சுகுமாரால் தாங்கமுடியவில்லை. "மானமிழந்து மனிதன் வாழ்வதா?" இதே கேள்வி அவனைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுகிறது. அதற்கும் துணிந்து விடுகிறான்.

மீதிக் கதையை திரை சொல்லும்

ராஜகுமாரி

பாட்டுகள்

1. பல்லவி

பைரவி] ராகமாலிகை [ஆதி

பாட்டை யென்ன சொல்வேன் பாங்கி
பாவலர் ஞான ஒவியமான தமிழ் (பாட்)

அ. பல்லவி

பாட்டினிலும் பொருள் தோற்றத்திலும் இன்னிசை
கூட்டறவிலும் இன்பம் ஊட்டிடும் ஆனந்தப் (பா)

தோடி

ஆட்டம் ஆனந்தம் தரும்—சதுர் (ஆ)

அழகான மயில் போலும் ஒயிலாக ஆடும் சதுர் (ஆ)

கேதாரகௌள

பாட்டுக்கிசைந்த ராக தாளங் கூட்டி தமிழ் (பாட்)

பார்வையுடன் கரங்கள் கால்களாட்டி (கண்)
தீட்டும் கவிப் பொருள் தெரியக்காட்டி புலவர் (புலவர்)
சிந்தை மகிழ யிந்த தேகாரோக்யம் பெரும் (ஆ)

2. ராகம் (மோஹனம்)

கோரஸ்

வாழ்வோம் வாழ்வோம்
மாதர்கள் நாமே (வாழ்)

வளர்கலையில் அரசியலில்
வாகை சூடி........வீரமதாய் (வாழ்)

ஆ........டவர் தம தடிமை
ஆஹாஹா........நாமா
அவர் மதிக்கவே ஜகம் துதிக்கவே (வாழ்)

வாளெடுக்கவும் பெண்தன்மை
சீர் படைக்கவும்
வகையாய் செயவே
மதியினால் பெருமையாய்
மானில மீதினிலே (வாழ்)

சீர்தரும் சமத்துவம்
தேசிய மகத்துவம்
பார் மீதினில் மேலோங்கிடவே
பழகுவோம் உலகிலே
பா........மணம் வீசவே
துதி பேசவே (வாழ்)

3. இராக மாலிகை

(1) ஆனந்த பைரவி [ஆதி

சுசு : அன்பின் பெருமை அருமை அதனை மனம்
அன்றி வாயில் சொல்லத்தரமா (அன்)

மல் : சொந்தம் தேடும் வாழ்வினில் அது போல்
சுகிர்தம் வேறெதுவும் தருமா (சொ)

(2) பஹுதாரி

சுகு : அடிமையிடம் ஓர் ராஜகுமாரி
அருகில் நாடியதும் அன்பல்லவோ (அடி)

மல் : அனைவரும் புவிமேல் ஒன்றே என்றும்
அழகொடு பழகுதல் நன்றலவோ (அனை)

(3) ஹேமாவதி

சுகு : ஆணுயர்வும் பெண்ணுருயர்வும்
ஆகும் தூய அன்பினிலே (ஆண்)

மல் : நாமும் நேரே காணும் காக்ஷி
நாளும் அன்பாலே யின்பம் (நாமும்)

சுகு & மல் அன்பின் பெருமை அருமை அதனை மனம்
அன்றி வாயில் சொல்லத்தரமா
சொந்தம் தேடும் வாழ்வினில் அதுபோல்
சுகிர்தம் வெறெதுவும் தருமா

4. ராகம் குந்தலவராளி

தாளம்] [ஆதி

அரசகுமாரி அன்புறும் ஸ்நேகம்
அதிர்ஷ்டமோ எதுவோ சந்தேகம் (அர)

தரணியின் மீதே தருணியும் நானும்
சரிசமமா நிஜமா பொய்யாமா (அர)

பூவொடு சேர்ந்த நார்மணம் வாய்ந்த
பாவனை போலவும் பூவையும் நானும் (பூ)

ஆவியும் தேகமும் மேவுதல் போலே
வாழ்குவோமோ என்னமோ
அன்பாலே (அ)

[ஆதி

5. சுகு : திருமுக யெழிலைத் திருடிக் கொண்டது
[தாமரையது (திரு)

அதனால் நானே பெரியவனென்றது தாமரையது (அத)

மல் : மருவொடுதேசார் வனரோஜா மலரென்ன
[சொன்னது (மரு)

சுகு : கருவிழிமாதின் கன்னச் சிவப்பைக் கவர்ந்தேன்
[அதனால்
பெருமை எனதே என்றது (கரு)

மல் : கதையின் முடிவு தானெது

சுகு : கலகம் தீர்ந்தது மலர்களின் (கல)

மற்று மொரு கள்வன் வந்து சேர்ந்ததால் (கல)

மல் : சண்டை தீர்த்த திருடன் திருடினதேதது (சண்)

சுகு : சாம்ராஜ்ய யுவராணியின் மனது தானது (சாம்)

மல் : சரிதான் பிறகென்ன நடந்தது

சுகு : சல்லாப எழில் மயிலே அது தெரியாது

மல் : சொல்லவா — நான் சொல்லவா—நடந்ததை நான்
சொல்லவா—பொல்லாத கள்ளனை
மனந்திருடிய மூன்றாவது கள்ளனை—ராணி சிறையில்
தள்ளி மூடினாள்-மஹாராணி சிறையில் தள்ளி மூடினாள்

சுகு : சொல்லுவாய் மானே—சிறை
உள்ள இடந்தானே—அதை
சொல்லுவாய் மானே

மல் : உள்ள மென்னும் சிறையிலந்தக்
கள்ளனை நான் வைத்த விதம் தான்
சொல்லவா—நான் சொல்லவா சுகுமாரா
சொல்லவா—இன்னும் சொல்லவா

6. தேசீய கீர் வாணி

நேரமிதே நேசன் குணவிலாசன்
சுகுமாரன் நேரே வரும் (நல்ல)

பூமாந்திடும் வண்டுபோல் பூமானும் வருவரே (பூமா)

பூவை என் ஆவலால் மேவிட நானெதிர் காண்பேன்
(நே)

கண்ணில் புகுந்தான் கருத்தில் கலந்தான்
காதலினால் எனை அடைந்தான் (கண்)

ஆதாரமான வன்தனையே (எனதுயி)

ஆதாரமான வன்தனையே—காணும்
பாக்கியமே மிகு சிலாக்கியம் (நே)

நாளை நான் வருவேன் எனவும்
மகிழ்வாய்ப் பகன்றவர் (நாளை)

மனம் நாணி ஏழை நான் என்றவர்
மாறாத நேர்மையால் (மனம்)

நீ யென் நாயகி என இசைந்தார்
நாதனும் நேர் வருவாரே (நேர)

7. சிந்து பைரவி [ஆதி

கண்ணாரக் காண்பதென்றோ காதல் வளர்த்த
பெண்ணைக் காண்பதென்றோ
மண்ணாளும் மகராஜன்
மகளெனும் உயர் வாழ்வை
எண்ணமலே ஏழை
என தன்பின் மணப் பூவை (கண்)

கனவினிலே கண்டு
காமுறும் பொருள் போலே
கைக் கொண்ட கனியது
வாய்க் கெட்டா விதம் போலே
நினைவது வீணச்சே
நீரினிற் குமிழ் போலே
நேசமாய் எனையாள்
ஈசனுன் அருளாலே (கண்)

[ஆதி

8. காசினிமேல் நாங்கள் வாழ்வதே
சுக வாழ்வுதான் கவலை யில்லாமல்
[மனங்கலங்காமல் (காசி)

ஆசையிற் பேராசையினாலே மனம் வாடிடோம்
அறிவு கெடாமல் நெறிதவறாமல் (காசி)

உழைத்திடும் ஏழைமக்கள் உடன் முதலாளி
உடுப்பது நான்கு முழம் உண்பது நாழி
உண்மையிது தெரிந்து நேசமாய்
சந்தோஷமாய் (காசி)

கூரை வீடாம் ஓலைக்குடிசையிலே
கூழுண்டாலும் சிலம் மாறும்
கோடீஸ்வரனோடுதான்
ஈடாகவே வாழுவோம்
கூரை வீடாம் ஓலைக் குடிசையிலே
குறையணுகாமலே வறுமை வராமலே (காசி)

9.

தாளம்] [ஆதி

மா மயிலென நடனமாடுகிறாளின்னாள்
மறுமலர் மேவிய மாது போலும் மானினி (மா)

தோகை மகிழ்ந்தே ஆடுறாள்
நாக ரீக நாட்டியம்
நேச பாவனை யாகவே
மோகனாங்கி போலவே (மா)

பார் தாங்கிய சேடனார் போலவே
பாவை யாள் தன்னாலே
ஆடுறாள் முன்னாலே
பாடாமலின்னாளே
பாங்கார் பூங்கொடி போலே
ஆர் வமாயென் நேரிலே (மா)

10. இராகம் சாருகேவி

தாளம்] [ஆதி

பல்லவி

மாரன் அவதாரம்—மணி

மந்தரவாதியிவர் மணிதரூபங் கொண்ட (மலர்)

அ. பல்லவி

பாரில் இவர்க்கு யாரும் நிகரோ
பால் வழியும் முகம் பங்கஜமோ—மலர் (மாரன்)

சரணம்

நடமாடி மகனை வடிவேலனே—நர (திரு நடமாடி)

நாரணரில் ஒருவனே
கொடுக்கும் கொடையாளி குணசாலி இன்பங் (கொடு)

கோலாகலன் இளங் கோமள வல்லியர்
கொஞ்சிடும் ரஞ்சித (மாரன்)

11. குறி சொல்லும் பாட்டு

தொகையறா

பாம்பாட்டிச் சித்தனையே
பக்தியொடு தான் பணிந்து
நான் பார்த்துச் சொல்லுங்குறி
நானுந்தவறாதே

வருகிறது (திரைக்கு)

ஜூபிடர்

தயாரிப்பு

அறிஞர் C.N. அண்ணாத்துரை M.A.,
அவர்கள் எழுதிய....

வேலைக்காரி

PICTURES CIRCUIT

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட். மகாராஸ், திருப்பூர்